**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல், பொலநறுவை மாவட்ட நீதாசன வலயத்துக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2075 - 2018 ජූනි මස 08 වැනි සිකුරාදා - 2018.06.08

*2075 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1190* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | *1195* |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | *1197* |
| ஆய விற்பனையும் குத்தகையும் | *1188* | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2018, மே மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, யூன் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூன் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1187 - B 81288- 5403 (2018/06)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனை - 2019

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பின்னைய காலப்பகுதிக்கும் கள்ளுத் தவறணை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் செல்லுபடியாகும் சகல மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது மதுபான வரி நிபந்தனைகளுக்குமிணங்க 2019 ஆம் ஆண்டுக்கு மதுபான (கள்ளு) சில்லறை விற்பனைக்கான வரப்பிரசாதங்களை விலைக்கு வாங்குவதற்காக பேருவளை பிரதேச செயலாளராகிய என்னால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் நாட்டின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் பெற்றுக்கொள்ளக்கூடிய வாறாக உரிய படிவத்தில் தயாரிக்கப்படுவதோடு –

(அ) கேள்விப்பத்திர வைப்புப்பணமாக எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கேள்விப்பத்திர பணம் வைப்புச்செய்து அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டையும் (ரசீத்) ;

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணி, பூமி ஆகிய நிரந்தர சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரதாரியின் வருமானம் பற்றிய சான்றிதழ்களையும் முன்வைக்க வேண்டும். கேள்விப்பத்திரமும் வருமானச் சான்றிதழும் முன்வைப்பது சம்பந்தமாக மேற்குறிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கான நிபந்தனைகள் முறையாக பேணப்பட வேண்டுமென்பதை கேள்விப்பத்திரதாரர்களுக்கு ஆணித்தரமாக வலியுறுத்தப்படுகிறது. கேள்விப்பத்திரம் பூர்த்தி செய்யப்படும்போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தல் வேண்டும்:-

(1) கேள்விப்பத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது அதிலே குறிக்கப்பட்டுள்ள பணத்தினை இலக்கத்திலும் மட்டுமல்லாது எழுத்திலும் குறிக்கப்படல் வேண்டும்.

(2) பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிக்கப்பட்ட சாட்சியாளரின் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) கோடிட்டு வெட்டப்பட்டுச் செய்யப்படும் சகல திருத்தங்களும் கேள்விப்பத்திரதாரரின் குறுகிய கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு பூர்த்தி செய்யப்படாத கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரம் –

(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்புச் செய்யப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டும் (ரசீத்) ;

(ஆ) வருமானச் சான்றிதழோடும், கடித உறையில் இட்டு முத்திரை (சீல்) பதிக்கப்பட வேண்டும். அக்கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'மதுபான விற்பனை நிலைய இலக்கமும் பெயரும்' குறிப்பிடப்பட்டு பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் கேள்விப்பத்திரம் கோரும் கடைசி நேரத்திற்கு முன்னதாகவே இடப்பட வேண்டும். அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

4. ஒவ்வொரு கள்ளுத் தவறணைக்காகவும் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் கீழே மேலதிகமாக இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட நேரத்தில் அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பேருவளைப் பிரதேச செயலகத்தில் சமுகமளித்தல் வேண்டும்.

5. சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பிய கேள்விப்பத்திரதாரர் ''தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்'' எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் அத்தினம் பி. ப. 2.30 மணிக்கு முன் பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் ஒரு தொகைப் பணம் முற்பணமாக பேருவளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்து கீழ்க்காணும் மதுபானம் சேகரித்து விற்பனை செய்வது சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடல் வேண்டும். இக்கட்டுப்பணமானது பணமாக அல்லது 'வங்கியில் செலுத்தப்படத்தக்க' எனக் குறிக்கப்பட்டு காசோலை மூலமாகவோ, மக்கள் வங்கி மூலமாகவோ அல்லது "பாதுகாப்புடைய காசோலை" என்ற பெயரில் செலுத்தப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது அவ்வங்கியின் பெயரில் செலுத்தப்பட்ட காசோலையாகவோ இருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத மதுபான விற்பனை நிலையம் மீள் விற்பனைக்காக 2018.09.19 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரம் இவ்வர்த்தமானிக்கு அமைவாக முன்வைக்கப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்கள் தேவைப்படின் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஜீ. டீ. சதுர மல்ராஜ்,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2018, மே 21.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | மதுபான நிலையம் திறக்கப்படும் நேரம் | மதுபான நிலையம் மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதித் திகதி | மீண்டும் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பேருவளை பிரதேச சபைப் பிரிவு | அளுத்கம உபபிரிவு எல்லைக்குள் | மு. ப. 11.00- பி. ப. 5.00 | பி. ப. 2.00 மற்றும் இரவு 8.00 | 2,000 | 2018, ஒகத்து 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 2018, செத்தெம்பர் 19 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

**குறிப்பு** : 2019 ஆம் ஆண்டிற்கு தற்போது மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்தை மீண்டும் பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்படமாட்டாது. புதிய இடத்தில் மதுபான விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படுமாயின் அது சம்பந்தமாக பேருவளை பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6-563

---

திருத்தம்

**மஹவெவ பிரதேச செயலகம்**

கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2018/2019

2018.05.04 ஆம் திகதிய , 2070 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியில், 5-15 ஆம் அறிவித்தலின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கள்ளுத் தவறணை விற்கப்படும் தினம்

மஹவெவ பிரதேச செயலகத்தில் நடைபெற இருக்கும் கள்ளுத் தவறணைகள் விற்கும் தினம் கீழுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது

2018 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக மஹவெவ பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனைக்கான 2018.06.14 ஆம் திகதியன்று விற்பனை செய்வதற்கு முடியாத கள்ளுத் தவறணைகள் மீண்டும் விற்பனை 2018.06.21 ஆம் திகதியாக திருத்தம் செய்கின்றேன்.

எம். டி. நந்தசிறி,
பிரதேச செயலாளர்,
மஹவெவ.

பிரதேச செயலகம்,
மஹவெவ,
2018, யூன் 05.

6-775

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: செட்ஸ் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிடட்
பதிவிலக்கம்: பீவீ 124978
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.08.23
பதிவு முகவரி: இலக்கம். 60/3, ஏ, சமகி மாவத்தை, அத்திடிய, தெஹிவளை , ஸ்ரீலங்கா.

கம்பனிச் செயலாளரின் கட்டளைப் படி,

6-320

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : எம்.ஸி.மெடிசொப் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 129844
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.02.15
பதிவு முகவரி : இலக்கம். 2 ஏ, டீல் பிளேஸ் , கொழும்பு 03

கம்பனிச் செயலாளர் .

6- 322

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கு அமைவாக பின்வரும் நிறுவனங்கள் கூட்டிணைக் கப்பட்டுள்ளன என்று அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது.-

கம்பனியின் பெயர் : மைல்போஸ்ட் புரொப்பர்ட்டி ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 131077
பதிவு செய்யப்பட்ட முகவரி : செக்றிடேறியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டட் , இல.10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 05

கம்பனிச் செயலாளர்கள்.

செக்றிடேறியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டட் ,
இல.10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 05.

6- 349

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கு அமைவாக பின்வரும் நிறுவனங்கள் கூட்டிணைக் கப்பட்டுள்ளன என்று அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது.-

கம்பனியின் பெயர் : த கிளீன் டிம் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 131221
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.496, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03

கம்பனிச் செயலாளர்கள்.

செக்றிடேறியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டட் ,
இல.10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 05.

6- 350

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பில்ட் அப்ஸ் பிஸ்னஸ் சொலுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 131617
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.04.10
பதிவு முகவரி : இல. 94, ரனவன, பிலிமதலாவ

6- 356

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது 2018 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 04 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது .-

கம்பனியின் பெயர் : மரீன்னா(பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 131972
பதிவு முகவரி : இல. 343, காரைநகர் வீதி, மூளாய் , சுழிபுரம், யாழ்ப்பாணம்

டீஸ் மெனேஜ்மன்ட்ஸ் கொன்சல்டன்ட்ஸ்
மற்றும் செக்கரட்டேரியல் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்.

6- 409

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது 2011 ஆம் ஆண்டு மாசி மாதம் 07 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது .-

கம்பனியின் பெயர் : டிமா லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 76979
பதிவு முகவரி : இல. 55/4, சூரியவிமல மாவத்தை, திவுலப்பிட்டிய, பொரலஸ் கமுவ

டீஸ் மெனேஜ்மன்ட்ஸ் கொன்சல்டன்ட்ஸ்
மற்றும் செக்கரட்டேரியல் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்.

6- 410

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242( 1) ஆம் பிரிவின் படியான கூட்டிணைப்பு

லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனி பீஎல்சீ - பீகிவ் 70 ( LOLC ) மற்றும் சிலோன் ரூட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் , பீவீ 81209 (CRPL) ஆகிய கம்பனிகளின் பணிப்பாளர்கள் சபையினால் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவிற்கமைவாக ( CRPL) கம்பனியினை ( LOLC) கம்பனியின் முழுமையான துணை நிறுவனமாக கூட்டிணைப்பதற்கான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது. இக் கூட்டிணைப்பின் விளைவாக , அனைத்து ( CRPL) இனது பங்குகளும் எவ்விதமான கொடுப்பனவோ அல்லது வேறு ஏதேனும் பெறுமதி வழங்களோ இன்றி இரத்துச் செய்யப்படுவதுடன் (LOLC) ஆனது (CRPL) இனது அனைத்து சொத்துக்களையும் பொறுப்புக்களையும் சுவீகரிக்கும். தொடர்ந்தியங்கும் கம்பனி ( LOLC) ஆகும். (LOLC) இனது தற்போதைய பணிப்பாளர்களே கூட்டிணைப்பின் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்களாக தொடர்ந்தியங்கும்.

கம்பனியின் பணிப்பாளர் சபையின் அபிப்பிராயப்படி, பரிந்துரைக்கப்பட்ட கூட்டிணைப்பானது இரு கம்பனிகளினதும் சிறந்த ஏற்புடையது என்பதுடன் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான ( LOLC) கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக கூட்டிணைப்பானது வலுவிற்கு வரும் என்பதுடன் தீர்வுத் திறன் பரிசோதனையினையும் திருப்திப்படுத்தும் எனக் கருதுகின்றார்.

இக் கூட்டிணைப்பானது 2018, யூன் 26 ஆம் திகதியன்று அல்லது கம்பனிகளின் பொதுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் நாள் தொடக்கம் வலுவிற்கு வரும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

LOLC கொப்பரேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனி பீஎல்சீ
மற்றும் சிலோன் ரூட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
ஆகியவற்றின் செயலாளர் .

2018, மே 23.

6- 421

## லங்கா லேன்ட் ரியல்ட்டி ( பிறைவேட்) லிமிட்டட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் , கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

லங்கா லேன்ட் ரியல்ட்டி ( பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2018 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி பீவி 00200259 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப் பட்டுள்ளதென்பதையும் புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது இல. 16-03, 16 ஆம் மாடி, கிழக்கு கோபுரம் , உலக வர்த்தக மையம் , எச்சிலன் சதுக்கம், கொழும்பு 1 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகின்றோம்.

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்.
என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட்
செக்ரட்டறீஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்,

எம் அன்ட் என் கட்டிடம், (5 ஆம் மாடி) ,
இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 00300.

6- 445

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் விதிகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : சல்வா பார்ம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 101998
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014.11.07
பதிவு செய்யப்பட்ட முகவரி: 141/ D, மஹபுத்கமுவ, முல்லேரியாவ, புதியநகரம்

சல்வா பார்ம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

6-446

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவிற்கமைவாக பின்வரும் கம்பனி 2018.03.29 ஆந் திகதி முதல் பெயர் மாற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் முன்னைய பெயர் : வெடிக்ட் சொப்ட் சொலுயூஷன்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

கம்பனியின் புதிய பெயர் : சவன்டிஸ் சொலுயூஷன்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 123105
கம்பனியின் முகவரி : இல.21A, சென் ஜோசப் ரோட், நுகேகொடை

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

6- 452

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : என்டபியோனட் லங்கா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 124810
கம்பனியின் முகவரி : இல.303/3A, ஆர் ஏ.டி மெல்மாவத்தை, கொழும்பு 03
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.04.09

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6- 453

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஓஷன் ஸ்பார்கில் சிலோன் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 00200003
கம்பனியின் முகவரி : இல.47, அலெக்சான்ரா பிளேஸ், கொழும்பு 07
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.04.17

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6- 454

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2)ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் பொது அறிவித்தல் விடுக்கப்படுவதாவது, மார்ஸ் பெப்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் ( கம்பனி பதிவிலக்கம் பீவீ 87773) நிலையான மூலதனத்தின் உத்தேச குறைப்பானது இலங்கை ரூபா ஐந்து பில்லியன் எண்பத்தெட்டு மில்லியன் மூன்று இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்றி ஐம்பதிலிருந்து (ரூ . 5, 085, 310, 650) இலங்கை ரூபா ஒரு பில்லியன் முன்னூற்றி எழுபத்தொரு மில்லியன் ஐந்து இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து ஐநூற்றி இருபது (ரூ. 1,371, 558, 520) வரை என்பதாகும்.

சபைக் கட்டளைப் பிரகாரம்,

கோப்பரேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

6- 455

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2)ஆம் பிரிவிற்கமைவாக கம்பனியொன்றின் கூறப்பட்ட மூலதனம் குறைக்கப்படுவது தொடர்பாக பின்வரும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : மஹாறம்ப ஹில் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 81309
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 06, பெட்லர் வீதி, காலி கோட்டை, காலி
குறைக்கப்படுவதற்கு முன்பு கூறப்பட்ட மூலதனம்: ரூ.8,565.800
குறைக்கப்பட்ட பின்பு கூறப்பட்ட மூலதனம்: ரூ.800
குறைக்கப்பட்ட தொகை : ரூ.8,565.000

செக்றிடேறியல் ஹவுஸ் அட்வைசரி
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல.10,
ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 05.

6- 467

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2)ஆம் பிரிவிற்கமைவாக கம்பனியொன்றின் கூறப்பட்ட மூலதனம் குறைக்கப்படுவது தொடர்பாக பின்வரும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : மஹாறம்ப எஸ்டேட் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 72264
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 06, பெட்லர் வீதி, காலி கோட்டை, காலி
குறைக்கப்படுவதற்கு முன்பு கூறப்பட்ட மூலதனம்: ரூ. 40, 566,950

குறைக்கப்பட்ட பின்பு கூறப்பட்ட மூலதனம்: ரூ.50
குறைக்கப்பட்ட தொகை : ரூ.40,566,900

செக்றிடேறியல் ஹவுஸ் அட்வைசரி
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல.10,
ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 5.

6-468

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1)ஆம் பிரிவின் படியான கூட்டிணைப்பு.-

ப்ரவுன்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பீஎல்சீ - பீ 66136 பீபி /பீகிவ் (BIPLC) ப்ரவுன்ஸ் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்)லிமிட்டட் ( முன்னைய பெயர்) - FLC ஜொயின்ட் வென்ட்சர் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் - பீவீ 74078 (BCHPL) ஆகிய கம்பனிகளின் பணிப்பாளர்கள் சபையினால் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவிற்கு அமைவாக BCHPL கம்பனியினை BIPLC கம்பனியின் முழுமையான துணை நிறுவனமாக கூட்டிணைப்பதற்கான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது. இக் கூட்டிணைப்பின் விளைவாக அனைத்து BCHPL இனது பங்குகளும் எவ்விதமான கொடுப்பனவோ அல்லது வேறு ஏதேனும் பெறுமதி வழங்களோ இன்றி இரத்து செய்யப்படுவதுடன் BIPLC ஆனது BCHPL இனது அனைத்து சொத்துக்களையும் பொறுப்புக்களையும் சுவீகரிக்கும் . தொடர்ந்தியங்கும் கம்பனி BIPLC ஆகும். இனது தற்போதைய பணிப்பாளர்களே கூட்டிணைப்பின் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்களாக தொடர்ந்திருக்கும்.

கம்பனியின் பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தலின்படி, பரிந்துரைக்கப்பட்ட கூட்டிணைப்பானது, இரு கம்பனிகளினதும் சிறந்த ஏற்புடையது என்பதுடன் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான BIPLC கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக கூட்டிணைப்பானது வலுவிற்கு வரும் என்பதுடன் தீர்வுத் திறன் பரீட்சையினையும் திருப்திப்படுத்தும் எனக் கருதுகின்றனர்.

இக் கூட்டிணைப்பானது 2018, யூன் 28 ஆம் நாள் அன்று அல்லது கம்பனிகளின் பொதுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் நாள் தொடக்கம் வலுவிற்கு வரும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
LOLC கோப்பரேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மண்ட்ஸ் பீஎல்சீ மற்றும் ப்ரவுண்ஸ் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
ஆகியவற்றின் செயலாளர்.

2018, மே 23.

6-526

## அறிவித்தல்

### சவுத் ஓறியண்ட் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல. பீவீ 15576

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1)ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : சவுத் ஓறியண்ட் (பிறைவேட்) லிமிட்டட் பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி : இல27/6, பார்க் ஒழுங்கை, ராஜகிரிய
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: HC ( Civil) 19/ 2017/ CO
கம்பனி கலைப்பாளர் பெயர்: G.J. David
முகவரி :` C/o SJMS Associates
Restructure & Corporate
Recovery,
Level 3, No.11, Castle Lane,
Colombo 04.
நியமனத் திகதி : 2017.11.27.

6-528/1

---

## அறிவித்தல்

### சவுத் ஓறியண்ட் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல. பீவீ 15576

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII இன் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : சவுத் ஓறியண்ட் (பிறைவேட்) லிமிட்டட் பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி : இல27/6, பார்க் ஒழுங்கை, ராஜகிரிய
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: HC ( Civil) 19/ 2017/ CO
நீதிமன்ற கட்டளைத் திகதி: 2017.11.27
கோரிக்கை தாக்கல் செய்த திகதி: 2017.05.09
கம்பனி கலைப்பாளர் பெயர்: G.J. David
முகவரி :` C/o SJMS Associates
Restructure & Corporate
Recovery,
Level 3, No.11, Castle Lane,
Colombo 04.

6-528/2

## அறிவித்தல்

### பிஸினஸ் போர்ம்ஸ் லிமிட்டட்
### கம்பனியின் பதிவு இல. பீபி 206

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1)ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : பிஸினஸ் (போர்ம்ஸ்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி : இல. 588, அவிசாவளை வீதி, பூமேரிய, கடுவலை
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: HC ( Civil) 46/ 2017/ CO
கம்பனி கலைப்பாளர் பெயர்: G.J. David
முகவரி :` C/o SJMS Associates
Restructure & Corporate Recovery,
Level 3, No.11, Castle Lane,
Colombo 04.
நியமனத் திகதி : 2018.02.08.

6- 534 /1

---

## அறிவித்தல்

### பிஸினஸ் போர்ம்ஸ் லிமிட்டட்
### கம்பனியின் பதிவு இல.PB 206

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII இன் கீழான கம்பனி கலைப்பு பற்றிய அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : பிஸினஸ் போர்ம்ஸ் லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி : இல. 588, அவிசாவளை வீதி, பூமேரிய, கடுவலை
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: HC ( Civil) 46/ 2017/ CO
நீதிமன்ற கட்டளைத் திகதி: 2018.02.08
கோரிக்கை தாக்கல் செய்த திகதி: 2017.09.19
கம்பனி கலைப்பாளர் பெயர்: G.J. David
முகவரி :` C/o SJMS Associates
Restructure & Corporate Recovery,
Level 3, No.11, Castle Lane,
Colombo 04.

6- 534/2

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : அவிராத்தே கெபே (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 131871
கம்பனி முகவரி: இல.455/1, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 8

பணிப்பாளர்.

6- 541

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மாத்தறை மாவட்டத்தில் வெலிகம கப்பரதொட்ட ஹில்ஹவுஸ் இல் வதியும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 785280113V உரித்துடைய மரக்கல மானகே டெனிஸ் நிலூஷா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்வதானது, இலங்கை, கண்டி, அஸ்கிரிய, வாரியபொல ஸ்ரீ சுமங்கல மாவத்தை, இலக்கம் 153/04 இல் வதியும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 700830985V உரித்துடைய சமர ஜயசேகர நலின் ஜகத் என்பவர் எனது அற்றோணித் தத்துவதாரராக நியமிக்கப்பட்ட மாத்தறை பிரசித்த நொத்தாரிசு திருமதி மாலிகா சஞ்ஜீவனி சிரிவர்தன அவர்களினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 391 மற்றும் 2016.07.26 ஆம் திகதிய அற்றோணித்தத்துவம் இல்லாதொழிக்கப்பட்டு இரத்துச் செய்து செயல் வலுவற்றதாக்கப்பட்டுள்ளதென்பதாகும். எனது சார்பாக அவர் செய்யும் எந்தவொரு செயற்பாடு சார்பாகவும் இதன் பின்னர் வகை கூறப்பட மாட்டாதெனவும் அறியத்தருகின்றேன்.

மரக்கல மானகே டெனிஸ் நிலூஷா.
ஹில்ஹவுஸ், கப்பரதொட்ட , வெலிகம.

6-327

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருவதாவது 28.06.2011 ஆந் திகதியிடப்பட்டு ஒன்டாரியோ, கனடா பிரசித்த நொத்தாரிசு நாதன் சிறிதரன் முன்னிலையில் கொழும்பு - 05, நாரஹேன்பிட்டி, அண்டர்சன் தொடர்மாடி, இல. S 5 ஐச் சேர்ந்த வள்ளிபுரம் ஆறுமுகநாதன் மற்றும் மனைவி ஆறுமுகநாதன் மோகனாம்பிகை என்பவர்களின் பெயரில் கொழும்பு - 05, நாரஹேன்பிட்டி, அண்டர்சன் தொடர்மாடி, இல. S 5 ஐச் சேர்ந்தவர்களும் No. 4, Grakie Trail, Scarboriugh, Ontario, MIXIX 3, Canada ஐச் சேர்ந்த பொன்னுத்துரை ஆனந்தராஜா மற்றும் மனைவி ஜெனிதா ஆகிய எம்மால் நிறைவேற்றப்பட்ட விஷேட அற்றோணித் தத்துவப்பத்திரம் 2017.11.08 ஆந் திகதி முதல் மீளப்பெறுவதோடு இரத்தும்

செய்யப்படுகிறது. 2017.11.08 ஆந் திகதி முதல் அற்றோணி தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நாம் பொறுப்பாக மாட்டோம்.

பொன்னுத்துரை ஆனந்தராஜா,
மனைவி ஜெனிதா.

08.06.2018

6-366

---

## விசேட அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

32257 Bunde Fritz, Erler- StraBe 4, Germany எனும் முகவரியைச் சேர்ந்த திசாந்தினி நிஷாந்தன் (கடவுச்சீட்டு இல.L7KWY4XKK) மற்றும் கணவர் தில்லைநாதன் நிஷாந்தன் (கடவுச்சீட்டு இல.L6ZH16FFC) ஆகிய நாம் இருவரும் கொழும்பு 06, பீட்டர்ஸன் ஒழுங்கை, இல.95-1/1 எனும் முகவரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை முருகதாஸ் (தே.அ.அ.இல.820062418V) என்பவருக்கு, ஜேர்மனி பிரசித்த நொத்தாரிசு Uwe Geimke அவர்களால் 09.12.2017 ஆம் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டு, ஏ.எஸ்.எஸ்.ஏ. இந்திவரி ஏ. ஞானசறி அவர்களால் பத்தரமுல்ல பதிவாளர் திணைக் களத்தில் 27.03.2018 அன்று அற்றோணித்தத்துவப் பத்திரப் பதிவேட்டின் 134 ஆம் திரட்டின் 34 ஆம் பக்கத்தில் தினப்பதிவேடு 221 இன் கீழ் பதியப்பட்டதுமான அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் வழங்கிய விசேட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கிறோம் என்றும் இன்றிலிருந்து குறித்த தத்துவக்காரரினால் எம் சார்பில் செய்யப்படும் எந்த செயலுக்கும் நாம் பொறுப்பேற்கமாட்டோம் என்றும் அத்தகைய செயல்க ளெதனையும் நாம் ஏற்றங்கீகரிக்க மாட்டோம் என்றும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகிறோம்.

திசாந்தினி நிஷாந்தன்.
தில்லைநாதன் நிஷாந்தன்.

6-391

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹீனபஹுவ, வெல்லவாயவில் வசிக்கும், லியனகே உபாலி (611650728V) ஆகிய நான், வெல்லவாய , ஹீனபஹுவவில் வசிக்கும் லியனகே பிரேமதிலக என்பவருக்கு வழங்கப்பட்டதும், சட்டத்தரணி திருமதி ஆர். எம். எல். துசாரி பியசேன என்பவரினால் 2004.10.25 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 32 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவமானது இன்று முதல் செயல் வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப் படுகின்றதெனவும் இதன் பின்னர் என் சார்பில் அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிற்கு நான் பொறுப்புதாரியல்ல எனவும் இலங்கை அரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

லியனகே உபாலி.

6-499

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, பத்தரமுல்லை, தர்மோதய மாவத்தை, மிஹிந்துபுர , இல.1117/4 இல் வசிக்கும் கருணாமுனி மனோஜ் சுராஜ் சில்வா ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எதிரிசிங்ஹவினால் 2015, ஓகத்து 05 ஆம் திகதி உறுதி செய்த பத்தரமுல்ல, பதிவாளர்அதிபதி அலுவலகத்தில் பதிவேட்டு இல. 176, ஏட்டு இல. 15, தொடர் இல. 8279 இல் பதிவு செய்யப்பட்ட இல. 1734 விசேட அற்றோணித்தத்துவத்தின் மூலம் காலி, தலபிட்டிய, பண்டாரநாயக்க பிளேஸ், இல. 66 இல் வசிக்கும் பொலன்னோவிட்டகே ருவணி இசங்கா ( தே.அ.அ.இல. 826801913V) என்பவருக்கு வழங்கப்பட்ட சகல அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் இன்று முதல் இரத்துச் செய்து அதிகாரமற்றதாக்கப்படுவதாக இத்தால் சகலருக்கும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அறிவிப்பதுடன் மேற்படி அதகாரத்தின் கீழ் அற்றோணி தத்துவதாரரால் செயற்படுகையில் ஏற்படும் எந்த விடயங்களுக்கும் நான் பொறுப்புக்கூற மாட்டேன் எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

6-524

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2018

### மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவு

அரசால் அனுமதிக்கப்பட்ட கீழ்க்காட்டப்படும் பிரதேசத்தில் தகுந்த இடங்களில் 2018, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2018, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தனியுரிமை அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளில் வெளிநாட்டு மதுபானங்களை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(i) 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகையில் விற்கும் நிபந்தனைகள்.

(ii) மதுபான வரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக தற்போதுள்ள பொது நிபந்தனைகள்.

2. கீழ்வரும் நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட மாதிரிப்படிவங்கள் மூலம் கேள்விப்பத்திரங்களை ரூபா5,000 க்கு வைப்பிலிடப்பட்டமைக்கு ஏதேனும் பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடனும் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதேபோன்று

அந்த சான்றிதழில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தொன்று விற்கப்படாமலிருப்பின் அந்த ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் 05 வருடங்கள் வரை செல்லுபடியாகும். வாடகை காலம் முடிவடைவதற்கு முன்பு ஆவணச் சான்றிதழின் செல்லுபடி காலம் முடிந்திருப்பின் முழுமையான வாடகைக் காலத்தில் செல்லுபடியானதாக இருக்கக்கூடிய ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் காலத்தில் பாதி நாள் வரையிலான மிகுதி காலத்திற்கு மேலதிக ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு முன்பு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராவது சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்து ;
(ஆ) கொழும்பு 02, ஸ்டேப்பல் வீதி, மதுவரி அலுவலகத்திலிருந்து ;
(இ) கொழும்பு மதுவரிச் சபை அலுவலகத்திலிருந்து.

3. உறையில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் உள்ளடக்கப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும் :-

“ மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் 09 ஆம் இலக்கமுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனை தவறணைக்கான கேள்விப்பத்திரம் - 2018”

2018.06.28 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பு மொறட்டுவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர உரிமையாளர்கள் கேள்விப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் மொறட்டுவை பிரதேச செயலகத்திற்கு வருதல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் அச்சந்தர்ப்பத்திலேயே கொள்வனவு செய்தவராக அறிவிக்கப்படுவதுடன் குறிக்கப்பட்ட பணத்தை வைப்புச் செய்யப்பட்ட பிணைக் கட்டணமாக மொறட்டுவை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளருக்கு அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் வாடகைக்கு விடுதலுக்கான நிபந்தனைகளில் கைச்சாத்திட அல்லது குறிப்பிட்ட பிணைப் பணத்தை எதிர்காலத்தில் வைப்பிலிடத் தவறுமிடத்து அவர் வைப்பிலிட்ட கேள்விப்பத்திர பிணைப் பணத்தை இழப்பதுடன் அவரை குற்றவாளியென மதுவரி அனுமதிப்பத்திரக்காரர்களின் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் முழுமையான பிணைப்பணத்தை வைப்பிலிட்டு விற்பனை செய்யும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட பின்னர் கேள்விப்பத்திர உரிமையாளர்களின் கேள்விப்பத்திர பிணைப்பணம் மறுபடி செலுத்தப்படும்.

6. எக்காரணமும் அறிவிக்கப்படாமல் ஒன்றையோ அல்லது அனைத்து கேள்விப் பத்திரங்களையோ மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. இந்த வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிலையத்தை பிரிவு இலக்கம் 09 இல் நிறுவுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் பிரிவினுள் தகுதியுள்ள கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கட்டிடமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பினை பிரதேச செயலாளர் கொண்டிருக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் பட்டியல் கீழ்வருமாறு:-

| (அ) இலக்கம் | (ஆ) பிரிவு | (இ) மதுபான தவறணை உள்ளடக்கப்படும் பிரதேசம் | (ஈ) மதுபான தவறணை திறக்கப் படும் நேரம் | (உ) மதுபான விற்பனை நிலையம் மூடப்படும் நேரம் | (ஊ) கேள்விப் பத்திரத்தின் பொருட்டு வைப்பிலிடப் படும் தொகை ரூபா | (எ) கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதி நேரம் | (ஏ) விற்கப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மொறட்டுவை மாநகரசபை எல்லைக்குள் பிரிவு இல. 09 | மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தில் பிரிவு இல. 09 காலிப் பாதையின் மேற்குப் பிரதேசத்தில் அமைந் துள்ள மொரட்டுவெல்ல கிராமத்தில் மாத்திரம். | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப. 2.00<br>பி.ப. 8.00 | 5,000 | மு.ப. 10.30 | 2018.06.28 |

8. மேலதிக விபரங்களை மொறட்டுவை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

9. **முக்கியம்.**- 2018.06.28ஆந் திகதிக்கு வாடகைக்குவிட இயலாத வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் 2018.07.11 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறுபடியும் குத்தகையில் விற்கப்படும்.

எச். ஆர்.எச். கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
மொறட்டுவை.

பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2018, மே 24.

6- 561

---

## ஏல விற்பனைகள்

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ — திருகோணமலை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

**திருகோணமலை நகர சபை எல்லைக்குட்பட்ட பெருந்தெரு வட்டார இல. 7 மத்திய வீதியில் அமைந்துள்ள வரிப்பண இல. 212 எனும் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள இதன் பின்னர் வியாபாரத்திற்குச் சொந்தமான பொருட்கள் என்றழைக் கப்படும் வெவ்வேறான மற்றும் பொது வியாபார பொருட்கள், காரியாலய தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மற்றும் சகல அசையும் சொத்துக்களும் இதன் பின்னர் கடனாளிக்குச் சொந்தமான வியாபார இருப்புகள் என்றழைக்கப்படும் வளாக களஞ்சியம் மற்றும் பண்டகசாலைகளில் உள்ள சகல பொருட்களும் மற்றும் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் கடனாளிக்குச் சொந்தமான நடைமுறைச் சொத்துக்களும் ஆகும்.**

இவ்வாதனம் வசீகரன் டிரேடர்ஸ் நிறுவனத்தின் பங்காளர்களான ஆறுமுகம் தங்கராஸ் மற்றும் புஷ்பலதா தங்கராஸ் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- திருகோணமலை நகரத்தில் மணிக்கூட்டு கோபுர சந்திக்கு அருகிலிருந்து மத்திய வீதி ஊடாக சுமார் 500 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் வலதுபக்கத்தில் பாதையில் எல்லையில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனத்தை 2018.07.09 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றியஅறிவித்தலுக்காக.**- 2018.04.20 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2017.04.27 ஆந்திகதிய "டேலி மிரர்", "லக்பிம" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 750 ரூபா;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** ''சிரேஷ்ட முகாமையாளர், (கடன் அறவிடுதல்) ஹற்றன் நஷனல் வங்கி பீ .எல். சீ. இல. 479, ரி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. '' தொலைபேசி இல.: 011-2661835, 011- 2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2310595, 071- 8446374, 071 - 4962449

6-385

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ — திருகோணமலை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**திருகோணமலை நகர சபை எல்லைக்குட்பட்ட பெருந்தெரு வட்டார இல. 7 மத்திய வீதியில் அமைந்துள்ள வரிபண இல. 212 காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் R. ஆறுமுகம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.12.30ஆம் திகதிய 1799A ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் A எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 8.10 பர்ச்சஸ் பரப்பளவானது.**

இவ்வாதனம் வசீகரன் டிரேடர்ஸ் நிறுவனத்தின் பங்காளர்களான ஆறுமுகம் தங்கராஸ் மற்றும் புஷ்பலதா தங்கராஸ் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- திருகோணமலை நகரத்தில் மணிக்கூட்டு கோபுர சந்திக்கு அருகிலிருந்து மத்திய வீதி ஊடாக சுமார் 500 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் வலதுபக்கத்தில் பாதையில் எல்லையில் இவ்வாதனம் அமைந்துள்ளது. (வரிப்பண இல. 212, மஹவீதி, திருகோணமலை.)

இவ்வாதனத்தை 2018.07.09 ஆந் திகதி பி.ப. 02.15 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றியஅறிவித்தலுக்காக.**- 2018.04.20 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2017.04.27 ஆந்திகதிய ''டேலி மிரர்'', ''லக்பிம'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 750 ரூபா;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** ''சிரேஷ்ட முகாமையாளர், (கடன் அறவிடுதல்) ஹற்றன் நஷனல் வங்கி பீ . எல். சீ. இல. 479, ரி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. '' தொலைபேசி இல.: 011-2661835, 011- 2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2310595, 071- 8446374, 071 - 4962449

6-386

---

## டீ.எப்.சீ.சீ. வங்கி பீஎல்சீ - புறக்கோட்டைக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**நுவரெலியா மாவட்டம் அம்பகமுவ கோரளை அக்கரவத்த கிராமத்தில் அமைந்துள்ள ''லக்ஷபானகல்ல மற்றும் காலவத்த'' எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் R.B. அபேகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013.12.18ஆந் திகதிய 2843ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 02 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 33 ஏக்கர் 03 றூட் 1.5 பர்ச்சஸ் பரப்பளவானது.**

**இவ்வாதனம் கொழும்பு 11 கேஸ்பா வீதி இல. 200 எனும் விலாசத்தில் ''கே.ஆர்.பிரதர்ஸ்'' எனும் பெயர் மகுடத்தின் கீழ் தனது பதிவுக் காரியாலயத்தை நடாத்திச் செல்லும் காலிமுத்து ராஜநாதன் என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக டீ.எப்.சீ.சீ வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**ஆதனத்தை வந்தடைதல்.**- கண்டி நகர மத்தியிலிருந்து ஹற்றன் பாதையில் சுமார் 54 கி.மீ தூரம் தியகல சந்தி வரை வந்து இடதுபக்கமாக திரும்பி மஸ்கெலியா பாதைக்கு பிரவேசித்து அப்பாதையில் சுமார் 10 கி.மீ தூரம் ''0'' சீரோ சந்தி (Zero Junc-

tion) வரை வந்து மஸ்கெலியா பாதைக்கு திரும்பி மேலும் சுமார் 05 கி.மீ தூரம் சென்றால் இப்பாதையின் எல்லையில் இடதுபக்கமாக மதகு இல. 5/7 மற்றும் 07ஆம் கி.மீ கம்பத்திற்கும் இடையில் அமைந்துள்ளது.

2018.07.05 ஆந் திகதி பி.ப. 02.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2017.08.25 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2017.08.09 ஆந் திகதிய "லக்பிம", "டேலி மிரர்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கபணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 750 ரூபா;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2000 ரூபா;

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.
மேற்கூறிய ஏல விற்பனையை அறிவித்தலின்றி இடைநிறுத்தவும் அல்லது இரத்துச் செய்ய வங்கிக்கு உரிமை உண்டு.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** " முகாமையாளர், - சட்டப் பிரிவு, டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ , இல. 75, டபிள்யு ஏ.டீ. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2."
தொலைபேசி இல.: 011-2371371.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.:081-2210595,071-8446374,071- 4962449.

6-387

## செலான் வங்கி பீஎல்சீ - மொனராகலை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**ஏல விற்பனை**

"கடன்பட்டோர் என்ற வகையில் மொனராகலையைச் சேர்ந்த திசாநாயக்க முதியான்சேலாகே நிமல்சந்திர என்பவருக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.

1. ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டத்தில் புத்தள பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புத்தள கோரள ஒக்கம்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில் ஒக்கம்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள "ஒக்கம்பிட்டிய கந்தியாய அல்லது கிரிவரலகஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பி.பீ. இலங்கசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்டு 1998.01.30 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. MO/9457 இல் துண்டு C அங்கு காணப்படுகின்ற அனைத்துமுடனும் ஒரு றூட் இரண்டு தசம் எட்டு பேர்ச்(0ஏ.1றூ.2.8பே.) 0.1083 ஹெக்டேயர் விஸ்தீரணத்தை துண்டு C கொண்டுள்ளது.

சொத்து இடமாற்றம் கொண்ட தலைப்பு 717 , 2012.05.03 ஆந் திகதி அனுமதிபெற்ற பதிவாளர் ஆர். எல். குணதிலக்க பிரசித்த நொத்தாரிசு என்பவரினால் தயாரிக்கப்பட்டது.

2. ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டத்தில் புத்தள பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புத்தள கோரள ஒக்கம்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில் ஒக்கம்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள "ஒக்கம்பிட்டிய கந்தியாய அல்லது கிரிவரலகஹாவத்த" (ஒரு பகுதி) என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பி.பீ. இலங்கசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்டு 2011.08.20 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. MO/9457 இல் துண்டு B அங்கு காணப்படுகின்ற அனைத்துமுடனும் இரண்டு றூட் ஐந்து தசம் ஆறு பேர்ச்(0ஏ.2றூ.5.6பே.) விஸ்தீரணத்தை துண்டு B கொண்டுள்ளது.

சொத்து இடமாற்றம் கொண்ட தலைப்பு 1135, 2013.04.01 ஆந் திகதி அனுமதிபெற்ற பதிவாளர் ஆர். எல். குணதிலக்க பிரசித்த நொத்தாரிசு என்பவரினால் தயாரிக்கப்பட்டது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2018,யூன் மாதம் 28 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- ஒக்கம் பிட்டிய பசாரிலிருந்து புத்தள வீதியால் 3 கி.மீ. தூரம் சென்று கந்தியாய வைத்தியசாலையின் வலதுபக்கமாக உள்ள மதுறுகெட்டியஎலவில்

உள்ள கிரவல் வீதியால் திரும்பி 20 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து கிரவல் வீதியின் இடது பக்கத்தில் முன்னணியில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2018.04.27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018.04.30 ஆந் திகதிய "டெய்லி மிரர்" மற்றும் "லங்காதீப" பத்திரிகைகளையும் 2018.04.23 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதத்திற்குப் பதிலாக உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரிகள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 2,000;
5. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,000 ரூபா;
6. விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொதத விளம்பரச் செலவு.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ( தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் , ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் " கொழும்பு 3, காலி வீதி, செலான் டவர், செலான் வங்கி பீஎல்சீ பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 2456463, 2456479.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

ரி அன்ட் ஒக்சன், இல.(50/3),
விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. : 011-3068185,
தொலைநகல் : 2572940.

6- 457

## செலான் வங்கி பீஎல்சீ - பலாங்கொட கிளை

*1990 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**ஏல விற்பனை**

"கடன்பட்டோர் என்ற வகையில் கொழும்பு 08 ஐச் சேர்ந்த சன்ஜயா சேடர சேனாரத், கொழும்பு 08 பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட பதிவு இல. பீவீ 77193 , 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்காகக் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய டிரிப்பிள் எஸ் சிப்பிங் ( பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து .

